நாள்.03.11.2023

**அசல் வழக்கு எண். 54/2021**

<u>வா.சா.1 - 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எவ்வளவு விஸ்திரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1 மா இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா இடம் எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை சுந்தரம் செட்டியார் என்பவரிடமிருந்து கிரையத்திற்கு வாங்கி வீடு கட்டினார். எனது தந்தை எந்த ஆண்டில் கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. எனது தந்தை கிரையம் பெற்ற மொத்த சொத்து 1 மா தான் என்றால் சரிதான். எனது தந்தை 1949 ல் 50 செண்டைதான் கிரையம் வாங்கியுள்ளதாக வழக்குரையிலும், கிரைய ஆவணத்திலும் உள்ளது என்றால் 1 மா தான் எனது தந்தை கிரையம் வாங்கினார். மேற்படி கிரையம் வாங்கிய சொத்தில் ஏதேனும் ஒரு பகுதியை எனது தந்தை விற்பணை செய்தாரா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு மேல் புறம் யாருடைய இடம் உள்ளது என்றால் பெருமாள் சேர்வை. எனது தந்தை 1949 ல் 50 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கி அதில் 22 செண்ட் நிலத்தை பெருமாள் சேர்வை என்பவரிடம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை 22 செண்ட் விற்பனை செய்தது போக மீதமுள்ள 28-1/4 செண்ட் நிலம் தான் உள்ளது என்றால் உண்மைதான். எனது சித்தப்பா பெயர் நடேசன் சேர்வை. எனது தந்தையும், எனது சித்தப்பாவும் 28-1/4 செண்டில் தலா சரிசமாக பிரித்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட 14-1/4 செண்டில் எத்தனை கூரை வீடுகள் உள்ளது என்றால் 2 கொட்டகை உள்ளது. மேற்படி கொட்டகை கள் எந்த திசையை நோக்கி வாசல் படி உள்ளது என்றால் ஒரு கொட்டகை தென்புறம் மற்றொரு கொட்டகை கிழக்கு பக்கம் உள்ளது. எனது வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தையும், எனது சித்தப்பாவும் 28-1/4 செண்டில் ஓட்டுவீடு கட்டி தனி தனியாக வசித்து வந்தார்களா என்றால் சரியல்ல. மேற்படி ஓட்டுவீடு பழைய வீடாக இருந்து இடிந்துவிட்டதால் தற்போது எனக்கு பாத்தியப்பட்ட 14-1/4 செண்டில் நான் கொட்டகை போட்டும், மீதமுள்ள 14-14 செண்டில் எனது சித்தப்பாவிற்கு இரண்டு கொட்டகை உள்ளதா என்றால் கொட்டகையே இல்லை. எனது சித்தப்பா நடேசன் சேர்வைக்கு

சொந்தமான 2 கொட்டகையில் ஒரு கொட்டகையில் பிரதிவாதிகளின் அம்மாவும், ஊனமுற்ற அவரது சகோதரியும் உள்ளார்கள் என்றால் இல்லை. மற்றொரு கொட்டகையில் கல்யானசுந்தரம் வசித்து வருகிறாரா என்றால் இல்லை. நானும், எனது அண்ணும் பாகபத்திரம் பத்திரம் செய்துக்கொண்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் எந்த ஆண்டில் பாகபிரித்துக்கொண்டோம் என்றால் 10 ஆண்டுகளுக்கு முன்பு. மேற்படி பாகபத்திரத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பாகப்பத்திரத்தில் 14-1/4 செண்டு தான் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது அது எதனால் என்றால் பிரதிவாதிகளின் 14-1/4 செண்ட் போக மீதி உள்ளதை எனக்கு ஒதுக்கிகொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பத்திரத்தை அசல் வழக்கில் தாக்கல் செய்தால் உண்மை தண்மை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்ததிவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.